

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனை, மொரிசியஸ் குடியரசு நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சர் கைலேஷ் குமார் சிங் ஜகுத்பால் நேற்று முன்தினம் (23.08.2023) சென்னை, தலைமைச் செயலகத்தில் சந்தித்து, தமிழ்நாடு மருத்துவச் சேவை கழகத்தின் மருத்துவக் கட்டமைப்புகள், மருந்து மற்றும் உபகரணங்கள் கொள்முதல் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் நிர்வாக இயக்குநர் எம்.அரவிந்த், மொரிசியஸ் குடியரசு நாட்டின் உயர் ஆணையர் (இந்தியா) தில்லம், தலைமை நிர்வாக அலுவலர் செவ்ருட்டுன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## விமானம் புறப்படும் நேரத்தில் தரையிறங்கிய மற்றொரு விமானம் விபத்து தவிர்ப்பு!

புதுடெல்லி, ஆக.25-

புதுடெல்லி விமான நிலையத்தில் தரையிறங்கும் விமானத்திற்கும் புறப்படும் விமானத்திற்கும் ஒரே நேரத்தில் அனுமதி வழங்கப்பட்டதால் பரபரப்பு நிலவியது.

விஸ்தாரா ஏர்லைன்ஸ் விமானம் புறப்பட அனுமதி வழங்கப்பட்ட அதே வேளையில் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டின் அறிவுறுத்தல்களைத் தொடர்ந்து மற்றொரு விமானம் கிளம்ப தயாரானது. இது உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது.

இருவருக்கும் ஒரே நேரத்தில் அனுமதி வழங்கப்பட்டதைய அறிந்த விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் விஸ்தாரா விமானத்தை புறப்படுவதை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து தில்லிபாக்டோக்ரா விமானம் புறப்படுவது நிறுத்தப்பட்டவுடன் உடனடியாக ஓடுபாதையிலிருந்து பார்க்கிங் பேவுக்கு திரும்பியது.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; ஆகம விதிகளில் தேர்ச்சி பெற்ற அனைத்துச் சாதியினரும் ஆலயங்களில் அர்ச்சகராகலாம் – என்று இந்தியாவின் உச்ச நீதி மன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறதே?

**சிந்துமணி : ஆமாண்டி அந்து; ஆலயங்களில் அர்ச்சகராக நியமனம் பெற சாதி தடையில்லை என்று சென்னை உயர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொண்டு தற்போது உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.**

**உச்சநீதிமன்றம் தமது தீர்ப்பில், ஆகம விதிகளின்படி தேர்ச்சி பெற்றவர்களாக, முறையான பயிற்சி – பூஜை செய்வதற்கான தகுதி பெற்றவர்கள் யாரை வேண்டுமானாலும், எந்த சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அர்ச்சகர்களாக நியமனம் செய்யலாம் எனத் தெளிவு படுத்தியுள்ளது.**

**இந்த நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தீர்க்க தரிசனத்தை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. அய்ந்தாவது முறை முதலமைச்சராக அரியணை ஏறிய கலைஞர், முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே, தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் தைத்திருந்த முள்ளை அகற்றிடும் வகையில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் தீர்மானம் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் அரசாணை வெளியிட்டார்; அமைச்சரவைத் தீர்மானத்தை தமது கைப்படவே மணிமணியாக எழுதி வழங்கினார்; என்பவை எக்காலத்திலும் அழியாத கல்வெட்டுச் சரித்திரம் !**

### கோவை, ஈச்சனாரி,

# விநாயகர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

கோவை, ஆக. 25-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (23.08.2023) நடைபெற்ற கோயம்புத்தூர் மாவட்டம், ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, கோனியம்மன் திருக்கோயில் மற்றும் கோட்டைமேடு, அகிலாண்டேசுவரி உடனுறை சங்கமேசுவரர் சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சென்று அங்குள்ள திருத்தேர்கள் மற்றும் தேர் பாதுகாப்பு கொட்டகைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத் துறை தனது நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளுதல், குடமுழுக்குகள் நடத்துதல், திருக்குளங்களை சீரமைத்தல், திருத்தேர்களை புனரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயில் சொத்துக்களை

ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், கோயம்புத்தூர் மாவட்டம், ஈச்சனாரி விநாயகர் திருக்கோயிலுக்கு 19 ஆண்டுகளுக்கு பிறகு ரூ.1.04 கோடி செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நேற்று திருக்குட முழுக்கு நன்னீராட்டு பெருவிழா நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து, கோவை, கோனியம்மன் திருக்கோயில் மற்றும் கோட்டைமேடு, அகிலாண்டேசுவரி உடனுறை சங்கமேசுவரர் சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சென்று அங்குள்ள திருத்தேர்கள் மற்றும் பாதுகாப்பு கொட்டகைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் செ.தாமோதரன், கோவை மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், இணை ஆணையர் பெ. ரமேஷ், உதவி ஆணையர்கள் சி.கருணாநிதி, திருமதி ரா.விஜயலட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# திருவாரூர் மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்!

## பூண்டி.கே.கலைவாணன் அறிக்கை!

திருவாரூர், ஆக. 25-

திருவாரூர் மாவட்ட இளைஞர் அணியின் செயல்வீரர்கள் கூட்டம் மாநில இளைஞர் அணியின் செயலாளரும், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்று (25.08.2023-வெள்ளிக்கிழமை) மாலை 5.00அளவில் நடைபெறுகிறது. என மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து தமது அறிக்கையில் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழ்நாடு அரசின் முதலமைச்சர், திராவிட நாயகர், கழகத்தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, திருவாரூர் மாவட்ட இளைஞர் அணியின் செயல்வீரர்கள் கூட்டம், கழகத்தின் முதன்மை அணியாம் இளைஞர் அணியினை எழுச்சியோடு வழிநடத்தி, கோடானு கோடி இளைஞர்களின் நெஞ்சங்களில் இடம்பெற்று, தமிழ்நாட்டு இளைஞர்களின் விளையாட்டு மேம்பாட்டுத்தேவைகளை பூர்த்தி செய்து,



உலக அளவில் அவர்களை விளையாட்டுத்துறையில் மிளிர செய்துவரும், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 25.8.2023. வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.00அளவில் திருவாரூர் காட்டூர் கலைஞர் கோட்ட அரங்கில் நடைபெற இருக்கிறது.

மணிப்பூரில் ஒன்றிய பி.ஜே.பி. அரசின் அலட்சியத்தால் ஏற்பட்ட கலவரத்தில் பாதிப்புகள் ஏற்பட்ட போது அங்குள்ள விளையாட்டு வீரர்களான இளைஞர்களின் எதிர்காலம் கருதி அவர்களுக்கு தமிழ்நாட்டில் விளையாட்டு பயிற்சி எடுத்துக் கொள்ள அழைத்து பயிற்சி கொடுத்து, இந்திய அளவில் அனைவரின் பாராட்டினை பெற்ற அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்கும் இந்த கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அந்தந்த பகுதிகளில் உள்ள இளைஞர் அணி தம்பிமார்களை வெண்ணிற சீருடையுடன் தவறாமல் பங்கேற்கதங்களது முழு ஒத்துழைப்பை வழங்கிடவும், கழகத்தின் அடலேறுகளாம் இளைஞர் அணியின்எழுச்சிமிக்கஉடன்பிறப்புகள் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### மாவட்ட இளைஞர் அணி கூட்டத்தில் பங்கேற்க – நாளை

# மயிலாடுதுறை வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் அறிக்கை!

நாகை, ஆக,25 -

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

ஒற்றை செங்கல்லை வைத்து தமிழ்நாடு முழுவதும் தேர்தல் சுற்றுப் பயணம் செய்து மோடியின் முகத்திரையைக் கிழித்த, நாடாளுமன்றதேர்தல், சட்டமன்ற தேர்தல், உள்ளாட்சி தேர்தல், நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து கழக வெற்றிக்கு உழைத்திட்ட உழைப்பால் உயர்ந்திட்ட இளைஞர் அணி செயலாளர், இளைஞர் மற்றும் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நாளை (26ம் தேதி) மாலை மயிலாடுதுறை சீனிவாசபுரத்தில் நடைபெறும் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள்.

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்



களுக்கு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் வரவேற்பு மயிலாடுதுறையில் வழங்கப்பட உள்ளது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத்தைச் சேர்ந்த உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், இளைஞர் அணியினர், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல்வீரர்கள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

மேலும் மயிலாடுதுறை சீனிவாச புரத்தில் 26ம் தேதி மாலை நடைபெற உள்ள மயிலாடுதுறை மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் இளைஞர் அணியின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் வழிகாட்டுதலின்படி அதிக அளவில் இளைஞர் அணியினரை இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்க செய்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. கூறியுள்ளார்.

### பகுத்தறிவுச் சிந்தனையாளர் – புலவர்

# செந்தலை ந.கவுதமன் துணைவியார் திருமதி உலக நாயகி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் ஆறுதல் கூறினார்!

சென்னை, ஆக. 25-

தமிழ் இணையக் கல்விக்கழக ஆலோசகரும் சூலூர் பாவேந்தர் பேரவை நெறியாளரும் தி.மு.கழக மாநில இலக்கிய அணிப் புரவலருமான புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்களின் துணைவியார் க. உலகநாயகி பி.ஏ.,பி.எட்.,அவர்கள் (வயது 62) உடல்நலக் குறைவால் 23.8.2023 இரவு கோவை சூலூர் ( தாயகம், எஸ்.வி.எல்.நகர்) இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணைவியாரை இழந்து துயருறும் புலவர் செந்தலை ந.கவுதமனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் ஆறுதல் கூறினார்.

மேலும், அன்னாரது மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-



**பகுத்தறிவுச் சிந்தனையாளர் புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்களின் துணைவியார் திருமதி உலகநாயகி அவர்கள், உடல்நலம் பாதிக்கப்பட்டு மறைவுற்றார் என்ற செய்தியறிந்து மிகவும் மனம் வருந்தினேன்.**

**பகுத்தறிவும், தமிழும் தமது இரு கண்களெனப் போற்றி வாழ்ந்த உலகநாயகி அம்மையாரை இழந்து வாடும் செந்தலை ந.கவுதமன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், பெரியார் தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழக தொழிலாளர் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகின்ற (5.9.2023 செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில், அண்ணா அறிவாலயத்தில், எனது தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து மாநில நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கழகத் தலைவர் அவர்கள் 19.8.2023 அன்று அறிவித்த வழிகாட்டுதலின் படி செயல்படுத்துதல் தொடர்பாகவும்,

மாவட்டம் தோறும் தொழிலாளர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாகவும்.

**பி.டி.சி.ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க.தொழிலாளர் அணி

### சூலூர் பாவேந்தர் பேரவை

# புலவர் செந்தலை ந.கவுதமன் துணைவியார் திருமதி உலக நாயகி மறைவு!

## பெரியாரியச் சிந்தனையாளர்கள் – கழகத்தினர் அஞ்சலி!

கோவை, ஆக. 25-

சூலூர் பாவேந்தர் பேரவை புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்களின் துணைவியாரும், பல்லடம் அரசு மேல்நிலைப் பள்ளி முன்னாள் தலைமையாசிரியர் சூ.ப.அரங்கசாமி (எஸ்.பி.ஆர்.) பள்ளபாளையம் சானகி இணையரின் மகளுமான சூ.அர.உலகநாயகி பி.ஏ.,பி.எட்., அவர்கள் தம் 62ஆம் வயதில் 23.8.2023 இரவு 11.45 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்

மறைந்த உலக நாயகி அவர்கள், செகதாம்பாள் எனும் இயற்பெயரைத் தமிழுணர்வால் உலகநாயகி எனச் சட்டப்படி மாற்றிக் கொண்டவர்.

தாலி நீக்கிய சுயமரியாதைத் திருமணம் ஏற்று, உறுதியான பகுத்தறிவு வாழ்வை மன நிறைவோடு மேற்கொண்டவர்.

மகள் க. தாய்மொழி, மருமகன் மரு.கு.இளந்தமிழன், பெயர்த்தி தா.இ.அவனிஇளமொழி முதலான அனைவரின் வளர்ச்சிக்கும் அடித்தளமாகத் தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர்.

அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து பெரியாரியச் சிந்தனையாளர்கள், கழகத்தினர், பாவேந்தர் பேரவையினர் உள்ளிட்ட ஏராளமானோர், அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

சூலூர் எஸ்.வி.எல்.நகர் 'தாயகம் ' இல்லத்திலிருந்து நேற்று (24.8.2023-வியாழன்) பகல் 12.00 மணிக்கு அன்னாரது இறுதி ஊர்வலம் புறப்பட்டு சூலூர் சமத்துவ வனம் மின்மயானத்தில் மதியம் 1.00மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (23.08.2023) கோயம்புத்தூர் மாவட்டம், ஈச்சனாரி விநாயகர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் பேரூர் ஆதீனம் தவத்திரு சாத்தலிங்க மருதாசல அடிகளார், மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கிணத்துகடவு சட்டமன்ற உறுப்பினர்செ.தாமோதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.